மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாணபுமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

114—

தொழிலாளர் நல வாரியம் மூலம் ஒசூரில் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகலை வாடகைக்கு விடுதல்.

* 14513 திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் ஒசூரில் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் குடியிருப்பிற்கு எடுக்கப்பட்ட வீடுகள் வாடகைக்கு விடப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை வாடகைக்கு விட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நல அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஒசூரில் தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் மூலம் தொழிலாளர்களுக்கு குறைந்த வாடகையில் ஒதுக்கீடு செய்வதற்கென குடியிருப்புகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

(ஆ) ஒசூர், பாகலூர் ரோட்டில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 84 'ஈ' டைப் வீடுகளை குறைந்த வருவாய் உள்ள தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் கருத்துரு அரசினால் பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது ஒவ்வொரு தொழிலாளியும் குறைந்த பட்ச வருவாயாக மாதம் ரூ. 350-க்கு குறையாமல் (நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ. 20-க்குக் குறையாமல்) சம்பளம் வாங்கும் தொழிலாளியாக இருப்பதால், இக் குடியிருப்புகளை தொழிலாளர் மலிவு வீட்டு வசதித் திட்டத்திலிருந்து வீட்டு வசதி வாரிய தவணைக் கொள்முதல் திட்டத்திற்கு மாற்றி ஒசூர் தொழில் நிறுவனங்களின் சங்கத்திடமிருந்து பெறப்பட்டுள்ள தொழிலாளர்களின் பட்டியலில் கண்டுள்ள தொழிலாளர்களுக்கு ஒதுக்கீடு செய்வது என்ற செயற்குறிப்பு அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையின் பரிசீலனையில் உள்ளது.